# மாணவர்கள் எதிர்காலத்தை திட்டமிட்டு பயணிக்க வேண்டும்: பீட்டர் அல்போன்ஸ்

மார்த்தாண்டம், ஏப். 29–

மாணவர்கள் எதிர்காலத்தை திட்டமிட்டு பயணிக்க வேண்டும் என்று மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி ஆண்டு விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாநில சிறுபான்மை ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் பேசினார்.



மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி ஆண்டு விழாவில், பீட்டர் அல்போன்ஸ் பேசினார்.

நிகழ்ச்சிக்கு குமரி சி.எஸ்.ஐ., பிஷப் டாக்டர் செல்லையா தலைமை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் டாக்டர் ஜெ- வரவேற்றார்.

முதல்வர் டாக்டர் பால்ராஜ் அறிக்கை வாசித்தார். பேராய நிர்வாக செயலாளர் திலேஷ், கல்லூரி தாளாளர் டாக்டர் விநோத்குமார் ஆகியோர் பேசினர்.

விழாவில், பீட்டர் அல்போன்ஸ் பேசியதாவது:

குமரி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் நேசமணி போன்ற தலைவர்கள் செய்த தொண்டை நாம் பாராட்டி பேச வேண்டும்.

அப்போது தான் புதிதாக தியாகிகள் உருவாகுவார்கள். வாழ்க்கையை முன்னேற்றப் பாதையில் அமைத்துச் செல்ல, நிகழ்காலத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தை திட்டமிட வேண்டும். கல்லூரி பருவம் கண்மூடி இறக்கும் போது கடந்து விடும். ஆனால் எதிர்காலத்தை புரிந்து, திட்டமிட வேண்டும். மாற்றத்தை உணர தவறுபவர்கள் வாழ்க்கைக்கு தகுதி அற்றவர்கள். இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் பேசினார்.

விழாவில், பேராய உறுப்பினர் அஜிகுமார், ஜோசப் தயாசிங், காங்., மாநில செயலாளர் தாரகை கட்பர்ட், மேற்கு மாவட்ட தலைவர் டாக்டர் பினுலால்சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர்.